**<u>சார்பு நீதிமன்றம், பரமத்தி</u>**

முன்னிலை – திரு.ஜி.பிரபாகரன், பி.ஏ., பி.எல்.,
சார்பு நீதிபதி, பரமத்தி.

2022–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 23–ம் தேதி வெள்ளிக்கிழமை

**<u>அசல் வழக்கு எண்:80/2022 ( CNR.No.TNNM10003222022)</u>**

சீனிவாசன் ... வாதி

//எதிராக//

1) ஐயப்பன் (எ) வீரன்
2) கமலேஷ்வரன் ... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது, என் முன்பாக இன்று 23.12.2022–ம் தேதியன்று, இறுதி விசாரணைக்காக வந்தபொழுது, வாதிக்காக கற்றறிந்த வழக்குரைஞர் திரு.பி.கே.பெரியசாமி அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் எக்ஸ்பார்ட்டி செய்யப்பட்டும், வாதி தரப்பில் நிகழ்த்திய வாதங்கள் கேட்கப்பட்டும், வாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்புவிக்கும்,

**<u>தீ ர் ப் பு ரை</u>**:–

வாதியால், இவ்வழக்கானது, வாதிக்கு, வழக்குரைச்சொத்தைப்பொறுத்து, கடந்த 12.06.1998–ம் தேதியில், ராசையன் (எ) மருதகண்டர் எழுதிக்கொடுத்துள்ள தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை அவர், கடந்த 29.12.2004–ம் தேதியில், ரத்து செய்து, எழுதிய, தான செட்டில்மெண்ட் ரத்துப்பத்திரம் செல்லாது என்று ரத்து செய்தும், வழக்குரைச்சொத்து, வாதிக்கு பாத்தியப்பட்டது என்று, விளம்புகை பரிகாரம் கோரியும், அதன் காரண பரிகார்த்தமாக, வழக்குரைச்சொத்தில் உள்ள, வாதியின் அமைதியான சுவாதீன அனுபவத்திற்கு பிரதிவாதிகள் எவ்விதமான இடையூறும் செய்யக்கூடாது என்று, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் மற்றும் செலவுத்தொகை கோரியும், பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

2) <u>வழக்குரைச்சுருக்கம்:</u>

ஆதியில், வழக்குரைச்சொத்து, வாதியின் தகப்பனாரான ராசையன் (எ) மருதகண்டருக்கு, பாத்தியப்பட்டு, அவரது சுவாதீன அனுபவத்தில் இருந்து வந்தபொழுது, அதை, அவர், கடந்த 12.06.1998–ம் தேதியில், ஓர் தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி, வாதிக்கு பதிந்து கொடுத்ததோடல்லாமல், அதன் சுவாதீனத்தையும் கொடுத்துவிட்டார். அதனடிப்படையில், மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரம் நடைமுறைக்கு வந்து, வழக்குரைச்சொத்தைப்பொறுத்து, வாதியின் பெயரிலேயே வருவாய் ஆவணங்கள் ஏற்பட்டு, அவரே அதை, பொத்தனூரில் உள்ள, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் வைத்து, பயிர்கடனும் பெற்று, அனுபவித்து வந்தபொழுது, வாதி, கடந்த 18.03.2022–ம் தேதியில், வழக்குரைச்சொத்தைப்பொறுத்து, வில்லங்கச்சான்றிதழ் பெற்றுப்பார்த்தபொழுதுதான், மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரம் ரத்து செய்து எழுதப்பட்டிருக்கிற ரத்து பத்திரம் பற்றிய விபரம் தெரிய வந்தது. இது சட்டப்படி ஏற்புடையதல்ல. மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை, ரத்து செய்துவிட்டதால், வழக்குரைச்சொத்தில், பிரதிவாதிகளுக்கும் உரிமை இருப்பதாக கடந்த 10.05.2022–ம் தேதியில், பிரதிவாதிகள் முயற்சி செய்ததை வாதி, தடுத்துவிட்டு, வாதியால் இவ்வழக்கானது, மேலே கூறிய பரிகாரங்கள் கோரி, பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

3) இந்நீதிமன்றத்திலிருந்து பிரதிவாதிகளுக்கு சென்ற அழைப்பாணையை அவர்கள் பெற்றுக்கொண்டு, இந்நீதிமன்றத்தில், அவர்களது வழக்குரைஞர் மூலம் ஆஜராகியிருக்கிறார்கள். இருந்தும், பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால், எக்ஸ்பார்ட்டி செய்யப்பட்டிருக்கிறார்கள். இருந்தபொழுதிலும், வாதியின் வழக்கினை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு, அவருக்குத்தான் இருக்கிறது. அதனால், சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. அதனடிப்படையில், வாதி தரப்பில் ஒரு சாட்சி விசாரணை செய்யப்பட்டு, ஆறு சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டிருக்கிறது.

4) <u>தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில்:–</u>

வாதி தாக்கல் செய்திருக்கும் இவ்வழக்கானது, அனுமதிக்கப்பட வேண்டிய ஒன்றா? அல்லது இல்லையா?

5) <u>பிரச்சினைக்குரிய தீர்வு:</u>

வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வாதி அவரை வா.சா.1–ஆக விசாரணை செய்து கொண்டிருக்கிறார். வா.சா.1–வாதி அவரது முதல் விசாரணையில்,

> "தாவா சொத்துக்களை, மேற்படி ராசையன் (எ) மருதகண்டர், எனக்கு சென்ற 12.06.1998–தேதியில், வேலூர் சார்பதிவக ஆவண எண்.1182/1998–தானசெட்டில்மெண்ட் பத்திரம் மூலம் எழுதிக் கொடுத்து, அன்றே, நான் தாவாச்சொத்துக்களை சுவாதீனம் பெற்றுக் கொண்டேன் என்றும் மேற்படி தேதியிலேயே, மேற்படி தானசெட்டில் மெண்ட் பத்திரங்கள் அமலுக்கும், நடைமுறைக்கு வந்துவிட்டது"

என்று சாட்சியம் அளித்திருக்கிறார். வா.சா.ஆ.1–கடந்த 12.06.1998–ம் தேதிய, தானப்பத்திரத்தின் அசலினை உற்றுநோக்கியபொழுது, அது, வழக்குரைச்சொத்தைப் பொறுத்து, வாதிக்கு, அவரது தகப்பனாரால் எழுதிக்கொடுக்கப்பட்ட பத்திரம் என்று அறிய முடிகிறது. வா.சா.ஆ.6–கடந்த 29.12.2004–ம் தேதிய, ரத்துப்பத்திரத்தின் சான்றிட்ட நகலினை உற்றுநோக்கியபொழுது, அது, வா.சா.ஆ.1–தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை, வாதியின் தகப்பனார் ரத்து செய்து, எழுதிய ரத்துப்பத்திரம் என்று அறிய முடிகிறது.

6) வா.சா.ஆ.1–தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை ஒப்புக்கொண்டே, வா.சா.ஆ.6–தானசெட்டில்மெண்ட் ரத்துப்பத்திரம் எழுதி, பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அதனால், அதில், கண்ட சாட்சிகள் விசாரிக்கப்பட வில்லை என்றாலும், வாதி, வா.சா.ஆ.1–தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை நிரூபித்திருக்கிறார் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும், வா.சா.ஆ.2–கணினி பட்டா, வா.சா.ஆ.3– கிராம கணக்கு வாதியின் பெயரிலேயே இருக்கிறது. மேற்படி சாட்சியங்களிலிருந்து, வழக்குரைச் சொத்துக்கள் வாதிக்கு பாத்தியப்பட்டது என்பதையும், அது, வாதியின் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகிறது என்பதையும் வாதி நிரூபித்திருக்கிறார் என்றும், வா.சா.,ஆ.1–தானசெட்டில்மெண்ட் பத்திரம் நீதிமன்றத்தின் மூலம் ரத்து செய்ய இயலும் என்றும், அவ்வாறில்லாமல் ரத்து செய்திருப்பது சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்து, அவ்வாறே, இந்த பிரச்சனைக்கு வாதிக்கு ஆதரவாக தீர்வு காணப்படுகிறது.

இறுதியாக, வாதிக்கு, வழக்குரைச்சொத்தைப்பொறுத்து, கடந்த 12.06.1998–ம் தேதியில், ராசையன் (எ) மருதகண்டர் எழுதிக்கொடுத்துள்ள தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை அவர், கடந்த 29.12.2004–ம் தேதியில், ரத்து செய்து, எழுதிய, தான செட்டில்மெண்ட் ரத்துப்பத்திரம் செல்லாது என்று, அதை ரத்து செய்தும், வழக்குரைச்சொத்து, வாதிக்கு பாத்தியப்பட்டது என்று, விளம்புகை செய்தும், அதன் காரண பரிகார்த்தமாக, வழக்குரைச்சொத்தில் உள்ள, வாதியின் அமைதியான சுவாதீன அனுபவத்திற்கு பிரதிவாதிகள் எவ்விதமான இடையூறும் செய்யக்கூடாது என்று, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கின் சூழ்நிலை மற்றும் தன்மை ஆகியவைகளை கருத்தில் கொண்டு செலவு தொகை ஏதுமில்லை என்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் படித்து பார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2022–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 23–ம் நாள் வெள்ளிக்கிழமை திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G PRABHAKARAN Digitally signed by G PRABHAKARAN Date: 2022.12.23 17:50:10 +0530

சார்பு நீதிபதி,
பரமத்தி.

<u>வாதிகள் தரப்பு சாட்சி:–</u>

வா.சா.1 –திரு. சீனிவாசன்

**<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:–</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 12.06.1998 | வாதியின் தகப்பனார், வாதியின் பெயரில் பதிவு செய்து கொடுத்திருந்த தானப்பத்திரத்தின் அசல். |
| வா.சா.ஆ.2 | 21.01.2020 | சிட்டாவின் கணினி நகல். |
| வா.சா.ஆ.3 | – | கிராம கணக்கின் நகல். |
| வா.சா.ஆ.4 | – | கிராம நிர்வாக அதிகாரி வழங்கிய சான்று. |
| வா.சா.ஆ.5 | 29.04.2021 | விவசாய பயிர் கடன் தள்ளுபடி சான்றிதழ். |
| வா.சா.ஆ.6 | 29.12.2004 | வாதியின் தகப்பனார், வா.சா.ஆ.1–தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை, ரத்து செய்து, எழுதிய ரத்துப்பத்திரத்தின் சான்றிட்ட நகல். |

G
PRABHAKARAN

Digitally signed by G PRABHAKARAN
Date: 2022.12.23 17:50:16 +0530

சார்பு நீதிபதி,
பரமத்தி.